செய்தி வெளியீடு எண்: 017 நாள்: 08.01.2019

## செய்தி வெளியீடு

ஹஜ் 2019 க்காக 6,379 (8 குழந்தைகள் உட்பட) விண்ணப்பங்கள் ஹஜ் பயணிகளிடமிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவால் பெறப்பட்டுள்ளன. எனவே, ஹஜ் 2019 க்கான ஹஜ் பயணிகளை 11.01.2019 அன்று குலுக்கல் முறை (குறா) மூலம் தெரிவு செய்யுமாறு மும்பை, இந்திய ஹஜ் குழு, மாநில ஹஜ் குழுவை கேட்டுக் கொண்டுள்ளது.

2. மும்பை இந்திய ஹஜ் குழு கேட்டுக் கொண்டபடி ஹஜ் 2019 க்கான ஹஜ் பயணிகளை குலுக்கல் (குறா) முறை மூலம் தெரிவு செய்ய தமிழ்நாடு மாநில ஹஜ் குழு முடிவு செய்துள்ளது. இக்குலுக்கல் நிகழ்ச்சி 11.01.2019 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சென்னை இராயப்பேட்டை புதுக் கல்லூரியிலுள்ள ஆனைக்கார் அப்துல் சுக்கூர் அரங்கத்தில் நடைபெறும். 2018 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு ஹஜ் புனிதப் பயணிகளுக்கு, ஹஜ் மானியமாக ரூ.6 கோடியை வழங்க தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

3. ஹஜ் 2019 க்காக, தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலமாக விண்ணப்பித்துள்ள புனிதப் பயணிகள், இக்குலுக்கலில் (குறாவில்) கலந்து கொண்டு நிகழ்ச்சியினை வெற்றிகரமாக நடத்திட ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9